
KJC-DNN
You Are a God Full of Compassion and Mercy
Album 22 Song 5
நீரே மனவுருக்கமும் இரக்கமுள்ள தேவன்

86 சங்கீதம்

நீரே மனதுருக்கமும் இரக்கமுள்ள தேவன்
நீடிய பொறுமையும் சத்தியமுள்ள தெய்வம்
நீரே பூரண கிருபையுள்ள தேவன்
நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டும் தெய்வம்

என்மேல் நோக்கமாகி எனக்கு இரங்கிடும்
உமது வல்லமையை அடியானுக்கு அருளிடும்
உமது அடியாளின் குமாரனை இரட்சியும்
பகைவர் வெட்கப்படும்படி அடையாளத்தைக் காண்பித்திடும்

நாள்தோறும் உம்மை நான் அழைக்கிறேன்
உம்மிடத்தில் என் ஆத்மாவை உயர்த்துகிறேன்
நானோ உம்மையே நம்பியுள்ளேன்
நான் சிறுமையும் எளிமையுமானேன் என் விண்ணப்பத்தை கேட்டிடும்

என்னுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கிடும்
உம்மை நோக்கி கூப்பிடும் போது கேட்டருளும்
தேவர்களுக்குள்ளே உமக்கு யாரும் நிகரில்லை
உம்முடைய கிரியைகளுக்கு யாரும் ஒப்பில்லை

நீர் உண்டாக்கின எல்லா ஜனங்களும் - வந்து
உமது நாமத்தை மகிமைப்படுத்துவர்
நீரே அதிசயங்களை என்றைக்கும் செய்கிறவர்
நீர்தான் ஒருவரே உண்மையான தேவன்

உமது வழியை எனக்கு போதியும் - நான்
உமது சத்தியத்தால் என்றும் நடந்திடுவேன்
உமது நாமத்திற்கு பயந்து இருக்கும்படி - என்
இருதயத்தை தேவன் நீரே ஒருமுகப்படுத்தும்

Dec	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M
'07	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29	30	31

KJC-DNN

November 2007

8

Thursday

Wk 45 • 312-053

Priorities

நீர் எனக்கு செய்த உமது கிருபை பெரியது
என் ஆத்துமாவை பாதாளத்தினின்று தப்புவித்தீர்
என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதித்து
உமது நாமத்தை நான் மகிமைப்படுத்துவேன்

F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	•
2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29	30	•

Too much of anything is good for nothing.


KJC-DNN